கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

அமர்வு வழக்கு எண்.54/2022

அ.சா. 8 (LW 8 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | தவமணி | **தொழில்** | |
| **தகப்பனார் பெயர்** | பழனிச்சாமி | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **13.07.2023** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1,2,3 எதிரிகள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது அட்சராஜாக்காபட்டியில் குடியிருந்து, கட்டிடப்பணி செய்து வருகிறேன். கடந்த 15.06.2021ம் தேதி காலை 11 மணிக்கு திண்டுக்கல் தாலுகா காவல் ஆய்வாளர் இரண்டலப்பாறை குளத்திற்கு அருகில் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தார். அப்போது ஆஜர் எதிரிகள் மூவரும் ஒரு இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். அவர்களை ஆய்வாளர் நிறுத்தி விசாரித்தார். எதிரி சிரஞ்சீவியை (A1) ஆய்வாளர் தனியாக அழைத்து விசாரித்தார். அப்போது எதிரி சிரஞ்சீவி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அப்போது தன் வசமிருந்த கத்தியையும், Passion Pro என்ற இருசக்கர வாகனத்தை போலீசாரிடம் ஒப்படைத்தார். சிரஞ்சீவி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், குருவும் கையொப்பம் செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.4 ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. எதிரி ஆஜர்படுத்திய ரத்தக்கறை கத்தியையும், இருசக்கர வாகனத்தையும் போலீசார் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். அந்த அத்தாட்சியில் நானும், குருவும் கையொப்பம் செய்தோம். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.5 ஆகு தற்போது குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் அன்று எதிரியிடம் இருந்து கைப்பற்றிய கத்தி தான் தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கத்தி ஆகும். அந்த கத்தி சா.பொ.2 ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. சிரஞ்சீவியிடமிருந்து போலீசார் கைப்பற்றிய வண்டி தான், தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள வாகனம். அந்த வாகனம் சா.பொ.3 ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2023.07.13 16:24:17 +0530

Additional District Judge,

Dindigul.